**லக்கல – பள்ளேகம பிரதேச சபை**
**மாத்தளை மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2017 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 மே 29 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2018 யூலை 31 ஆந் திகதி தலைவருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து லக்கல – பள்ளேகம பிரதேச சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன

(அ) நிலையான சொத்துக்களின் கூட்டுத்தொகை மற்றும் மூலதன உள்ளீட்டுக்கு வருமானத்தினால் பங்களிப்புச் செய்யும் கணக்கின் மீதிக்குமிடையே ரூபா. 4,093,098 வித்தியாசம் காணப்பட்டது.

(ஆ) மீளாய்வாண்டில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 62,545 பெறுமதியான பொருளிருப்பு பொருட்கள் கணக்கிடப்படாமை காரணமாக அத்தொகையினால் சொத்துக்கள் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(இ) 2014 ஆம் ஆண்டில் கூடுதலாகச் செலுத்தப்பட்டிருந்த ரூபா 23,771 ஊழியர் சம்பளம் மீளாய்வாண்டில் மீண்டும் அறவிடப்பட்டு வருமானக் கடன்படடோர் கணக்கில் வரவிடப்பட்டிருந்ததன் காரணமாக வருமானக் கடன்ப்டோர் மீதி குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஈ) சபைக்குச் சொந்தமாகவிருந்த இரண்டு மோட்டார் சைக்கிள்களை மதிப்பீடு செய்து கணக்கிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) மீளாய்வாண்டிலும் அதற்கு முந்திய வருடங்களிலும் நிர்மாணிக்கப்பட்டிருந்த ரூபா 4,115,256 பெறுமதியான கட்டிடங்கள் நிலையான சொத்தாக இனங்காணப்பட்டு கணக்கிடப்பட்டிருக்கவில்லை.

(ஊ) பிடவல சமனல விளையாட்டரங்கின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக 2016 ஆம் ஆண்டில் கைச்சாத்திடப்பட்டிருந்த ரூபா. 800,000 பெறுமதியில் ரூபா. 724,540 தொகை உள்ளுராட்சி திணைக்களத்திடமிருந்து 2017 ஆம் ஆண்டில் கிடைத்திருக்கையில் கடன்பட்டோராக ரூபா. 800,000 குறிப்பிடப்பட்ட காரணத்தினால் கடன்பட்டோர் ரூபா. 724,540 கூடுதலாகக் காட்டப்பட்டிருந்தது.

(எ) மீளாய்வாண்டின் இறுதியில் சபைக்குச் சொந்தமாகவிருந்த இரண்டு நடைமுறைக் கணக்குகளுடன் தொடர்பான கூட்டுத்தொகையான ரூபா. 115,070 கணக்குகளிலிருந்து விடுபட்டிருந்தது.

(ஐ) மீளாய்வாண்டின் இறுதியில் களஞ்சியத்திலிருந்த எழுதுகருவிகள் தொகை கணக்கிடப்பட்டு நிதிக்கூற்றுக்களில் சேர்க்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன

(அ) நிதிக்கூற்றுக்களில் காணப்படுகின்ற ரூபா 40,784,417 கூட்டுத்தொகையான 09 கணக்கு விடயங்களுக்குரிய மீதிகளுக்கும் அவற்றுக்குரிய பட்டோலைகளுக்கும் மற்றும் அறிக்கைகளில் காணப்படுகின்ற மீதிகளுக்கும் இடையே ரூபா 3,854,651 கூட்டுத்தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

(ஆ) மீளாய்வாண்டின் ஆரம்பத்தின் போது கணக்குகுளில் காணப்பட்ட 04 ஆரம்ப மீதிகள் அத்திகதியில் உள்ளவாறு அட்டவணைகளுக்கு இடையே வேறுபாடுகளின் பெறுமதி ரூபா 262,825 ஆக இருந்தது.

(இ) ஏனைய வருமான பதிவேட்டில் குறிப்பிடப்பட்ட வருமான மூலகங்கள் மற்றும் கணக்கீடு செய்யப்பட்டிருந்த பெறுமதிகளுக்கு இடையே ரூபா 86,307 ஆன வேறுபாடு காணப்பட்டது.

**1.3.3 தொங்கல் கணக்குகள்**

தொங்கல் கணக்கில் ஆரம்பத்தில் காணப்பட்ட ரூபா 1,839,420 ஆக இருந்ததுடன் அம்மீதி இறுதி மீதியாக கொண்டு வரப்பட்டிருந்தன. பரீட்சை மீதியில் தொங்கல் கணக்கின் மீதி ரூபா 1,719,801 என கணக்கீடு செய்தமையால் பேரேட்டுக் கணக்கு மற்றும் ஐந்தொகைக்கு இடையே ரூபா 116,619 ஆன வேறுபாடொன்று காணப்பட்டது.

**1.3.4 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

**(அ) பெறவேண்டிய கணக்குகள்**

(i) நீண்ட காலமாக நிதிக்கூற்றுக்களில் மாற்றமின்றி முன்கொண்டுவரப்படுகின்ற ரூபா 160,724 கூட்டுத்தொகையான பெறவேண்டிய 03 கணக்கு மீதிகளின் பெறுமதி மீதிகளைத் தீர்வு செய்வதற்கு மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் உழவு இயந்திர வாடகையாக ரூபா 181,426 தொகை அறவிடப்பட வேண்டியிருந்தது.

**(ஆ) செலுத்த வேண்டிய கணக்குகள்**

மீளாய்வாண்டு இறுதியில் செலுத்த வேண்டிய 04 கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 2,088,919 ஆக இருந்ததுடன், நீண்ட காலமாக தீர்வு செய்யப்படாமல் காணப்படும் இம் மீதிகளை மீளாய்வாண்டின் இறுதியிலும் தீர்வுசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.5 கணக்காய்விற்கான எழுத்து மூலச்சான்றுகள் இன்மை

தேவையான தகவல்கள் சமர்ப்பிக்கப்படாமையால் காரணமாக ரூபா 9,882,171 கூட்டுத்தொகையான 6 கணக்கு விடயங்கள் கணக்காய்வின் போது திருப்திகரமாக மெய்மையாய்வு செய்ய முடியாமல் இருந்தன.

### 1.3.6 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

கீழே காண்பிக்கப்படுகின்ற சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் சுற்றறிக்கை என்பவற்றுடனான தொடர்பு | | இணங்காமைகள் |
|---|---|---|
| (அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 24 ஆம் பிரிவு | - | சபையினால் நிர்மாணிக்கப்பட்ட அனைத்துப் வீதிகளையும் வர்த்தமானியில் வெளியிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாகம்) விதி | | |
| i. விதி இலக்கம் 196 மற்றும் 197 | | ஒவ்வொரு மாத இறுதியிலும் பாவனைப் பொருள் களஞ்சியப் பொருள் பதிவேடு பரீட்சிக்கப்பட்டு செயலாளரினால் கையொப்பமிடப்பட்டிருக்கவில்லை. |
| ii. விதி இலக்கம் 202 | 182,068 | ஒவ்வொரு மாத இறுதியிலும் பாவனைப் பொருளிருப்பு பதிவேடு, பாவனைப் பொருள் பதிவேடு மற்றும் இருப்பு பதிவேடுகள் சமப்படுத்தப்பட்டு மீதிகள் புது வருடத்திற்காக முன்கொண்டு செல்லப்பட வேண்டிய போதிலும் நீர் மற்றும் மின்உபகரண பதிவேடுகளில் சில பொருள்/ உபகரண மீதிகள் முன்கொண்டு செல்லப்பட்டிருக்கவில்லை. களஞ்சியப் பொருள் பதிவேடு பரீட்சிக்கப்பட்டு செயலாளரினால் கையொப்பமிடப்பட்டிருக்கவில்லை. |
| iii. விதி இலக்கம் 214 | - | மீளாய்வாண்டிற்குரிய பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. |
| iv. விதி இலக்கம் 217 | | சபைக்குச் சொந்தமான மற்றும் சபையினால் பயன்பாட்டிற்கு எடுக்கப்படும் சகல காணி மற்றும் கட்டிடங்கள் தொடர்பாக பீ.எஸ்.46 பிரகாரம் பதிவேடொன்று நாளாதுவரையாக பராமரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் 371(2) | | 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளின் போர்து 04 சந்தர்ப்பங்களின் 06 உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 137,696 ஆன முற்பண மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| | |
|---|---|
| (ஈ) 2009 ஏப்ரல் 16 ஆந் திகதிய 09/2009ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கை | சகல அரச நிறுவனங்களிலும் கைவிரலடையால பதிவுசெய்ம் இயந்திரத்தின் மூலம் வருகை மற்றும் வெளியேறல் உறுதிப்படுத்தல் மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

### 1.3.7 போதிய அதிகாரத்தினால் உறுதி செய்யப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிர்வாகம்) சட்டங்கள் 103, 106 ஆகியவற்றின் பிரகாரம் ஏதேனுமொரு சேவைக்காக மேற்கொள்ளப்படும் கொடுப்பனவிற்காக உறுதிச்சீட்டினை உறுதிப்படுத்தப்படுகின்ற போது உறுதிப்படுத்தலுக்கு அவசியமான ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதும் பிரதேச சபையின் செயலாளரினால் பல்வேறு பயிற்சித் திட்டங்களில் கலந்து கொண்டமைக்கான வருகைச் சான்றிதழ் சமர்ப்பிக்கப்படாமல் பிரயாணச் செலவினம் மற்றும் இணைந்த படிகளாக ரூபா. 14,969 செலுத்தப்பட்டிருந்த போதிலும் அவற்றில் கலந்து கொண்டனரா என்பதை உறுதிப்படுத்துவதற்கான சான்றுகள் காணப்படவில்லை.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 74,906 ஆக இருந்ததுடன், அதற்கு ஒத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 2,409,840 ஆக இருந்தது.

### 2.2 நிதிக் கட்டுப்பாடு

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) 2016 ஆம் ஆண்டு முதல் லக்கல பிரதேச அபவிருத்தி வங்கியில் பேணிச்செல்லப்படுகின்ற ரூபா 1,000,000 வீதமான இரண்டு நிலையான வைப்புக்களுக்காக புதுப்பித்தல் சான்றிதழ்களை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சபைக்குச் சொந்தமான மக்கள் வங்கியில் பேணிச் செல்லும்இரண்டு நடைமுறைக் கணக்குகளில் ரூபா 115,070 தொகை கணக்குகளிலிருந்து விடுபட்டிருந்ததுடன் அக்கணக்குகள் 2012 ஆம் ஆண்டிலிருந்து செயற்பாடற்றுக் காணப்பட்டன.

### 2.3 வருமான நிர்வாகம்

### 2.3.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரித்தாக சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| வருமான மூலம் | | 2017 மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | 2016 மதிப்பிடப்பட்ட வருமானம | பட்டியலிட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. |
| (i) | வீதவரி மற்றும் வரி | 220,520 | 90,000 | 25,300 | 132,320 | 500 | 2,611 | - | 69,360 |
| (ii) | வாடகை | 47,600 | 99,100 | 79,300 | 36,200 | 115,600 | 106,100 | 69,960 | 36,140 |
| (iii) | அனுமதிப்பத்திர கட்டணங்கள் | 837,000 | 342,100 | 342,100 | - | 715,500 | 502,265 | 502,065 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 3,512,000 | 2,276,084 | 1,476,084 | 800,000 | 2,785,000 | 3,013,962 | 2,211,522 | 802,440 |
| | | 4,617,120 | 2,807,284 | 1,922,784 | 968,520 | 3,616,600 | 3,624,938 | 2,783,547 | 907,940 |

### 2.3.2 வருமான சேகரிப்பின் செயலாற்றல்

சபையினால் வருமானத்தை அதிகரித்துக்கொள்வதற்காக நடவடிக்கை எடுக்கப்படாததன் காரணமாக 2016 ஆம் ஆண்டில் ரூபா 6,450,849 தொகையான ஏனைய வருமானம் மீளாய்வாண்டின் போது ரூபா 4,405,128 வரை ரூபா 2,045,721 ஆல் அதாவது 46% ஆல் குறைவடைந்திரந்தது.

### 2.3.3 ஏக்கர் வரி

5 ஆண்டுகளுக்கு முன்னிருந்து கொண்டு வரப்படும் நிலுவை ஏக்கர் வரி மீதி ரூபா 65,435 ஆக இருந்தது.

### 2.3.4 வாடகை

மீளாய்வாண்டின் இறுதியில் காணப்பட்ட நிலுவை குத்தகை வாடகை மற்றும் வீட்டு வாடகையாக மீதி ரூபா 126,510 தொகை அறவிடப்பட வேண்டியிருந்தது.

### 2.3.5 அனுமதிப்பத்திரக் கட்டணம்

மீளாய்வாண்டிற்காக வருடாந்த வியாபார அனுமதிப்பத்திரங்கள் தொடர்பான கணிப்பீடு மேற்கொள்ளப்படாமையினால் பட்டியலிடப்பட்ட வருமானங்கள் சரியானதென உறுதிப்படுத்திக்கொள்ள முடியாதிருந்தது.

### 2.3.6 ஏனைய வருமானம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(i) மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு நிலுவை நீர்க் கட்டண மீதி ரூபா 446,132 ஆக காணப்பட்டதால் அவ்வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டமையால் நீர் பாவனை பதிவேட்டின் பிரகாரம் பட்டியலிடலின் சரியான தன்மையை உறுதிப்படுத்த முடியவில்லை.

(ii) கிடைக்க வேண்டிய நீர் இணைப்புக் கட்டணங்களாக மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 231,897 ஆக காண்பிக்கப்பட்டிருந்ததுடன் இப்பணத்தை பல வருடங்களாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.3.7 நீதிமன்ற தண்டப்பணமும் முத்திரைக் கட்டணமும்

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரத் தரப்பினரிடமிருந்தும் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நீதிமன்றத் தண்டப் பணம் மற்றும், முத்திரைக் கட்டணங்களாக ரூபா 5,510,682 ஆக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபைச் சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொது சுகாதாரம், பொது உபயோக சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் கட்டுப்படுத்தல், மக்களின் நல விவகாரங்கள், வசதிகள் மற்றும் நலன்கள் ஆகிய சபையினால் மேற்கொள்ளப்பட வேண்டிய செயற்பாடுகளை நடைமுறைப்படுத்தல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.

#### (அ) உப விதிகள்

பிரதேச சபைச் சட்டத்தின் 126 ஆவது பிரிவின் கீழ் 17 பிரதான காரணங்களை நிறைவேற்றுவதற்காக உப விதிகள் பிறப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்த போதிலும் 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரை எஞ்சிய 15 உபவிதி பிறப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

#### (ஆ) செயல்நடவடிக்கைத் திட்டம்

விதிக்கப்பட்டிருந்த உப விதிகளின் பிரகாரம் சபையினால் நிறைவேற்றப்பட வேண்டிய இலக்குகளுக்காக வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

#### (இ) திண்மக் கழிவு முகாமைத்துவம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

i. மீளாய்வாண்டில் திண்மக்கழிவுப் பொருட்களை வெளியேற்றுவதற்காக ரூபா 1,007,677 செலவிடப்பட்டிருந்த போதிலும் முறையான முகாமைத்துவமொன்று இல்லாமல் அரசின் காணியொன்றில் நானாந்தம் வெளியேற்றப்பட்டு வருகின்றது.

ii. நாளாந்தம் சேரும் கழிவுப்பொருட்கள் தெரிவொன்றோ வேறாக்கலோ மேற்கொள்ளாமல் கழிவுப்பொருட்கள் புதைக்கப்பட்டு வந்தது. உக்கும் கழிவுகள் கொம்போஸ்ட் உரம் உற்பத்தி செய்தல், உக்காத கழிவுகள் மீள்சுழற்சிக்குட்படுத்தல் போன்ற நீண்டகால கழிவுப்பொருு முகாமைத்துவ செயற்திட்டமொன்றுக்கு தொடர்புபடுவதற்கு சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.2 மனித வள முகாமைத்துவம்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

**(அ) ஊழியர் வெற்றிடங்கள் மற்றும் மிகை**

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் சபையின் பதவியணியின் வெற்றிடங்கள் 22 ஆக காணப்பட்டதுடன், .இந்த 22 வெற்றிடங்களில் 13 இரண்டாம் மட்டத்தின் பதவியணியினராக இருந்தன.

(ஆ) 2014 ஒக்தோபர் 01 மற்றும் 2014 ஒக்தோபர் 24 ஆந் திகதி நியமனம் கிடைத்த பதவியணியின் 11 ஊழியர்களுக்காக வினைத்திறமைகாண் தடைப் பரீட்சை நடாத்தப்படாமல் 03 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்ததுடன் இதன் காரணமாக அந்த ஊழியர்களை நிரந்தரமாக்க முடிாமல் இருந்தது.

**3.3 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

**கட்டிட நிர்மாணத்தின் மீதான கட்டணங்களை அறவிடல்**

மொரகஹகந்த திட்டத்தில் மீள் குடியேற்றப்பட்ட சுமார் 1600 குடும்பங்கள் இருப்பதாக குறிப்பிடப்பட்டிருந்ததுடன் இம் மீள் குடியமர்த்தப்பட்ட குடும்பங்களுக்காக 2016 மற்றும் 2017 வருடங்களுக்கான புதிய கட்டிட திட்டங்களை அங்கீகரிப்பதற்காக கட்டணம் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாததன் காரணமாக ரூபா 7,600,000 வருமானத்தை சபை இழந்திருந்தது.

**3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**3.4.1 சொத்துக்கள் பதிவேடுகளுக்கு உட்படுத்தாமை**

பிரதேச சபைக்குச் சொந்தமாக காணப்படும் கட்டிடங்கள், வாகனங்கள் இயந்திர உபகரணங்கள் பதிவேடுகளுக்கு உட்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**3.4.2 சொத்துக்களிலிருந்து பெற வேண்டிய வருமானங்களைப் பெற்றுக்கொள்ளாமை**

புறநகும திட்டத்தின் கீழ் ரூபா. 26,888,432 ஆன ஒப்பந்தப் பெறுமதியில் நிர்மாணிக்கப்பட்டிருந்த லக்கல – பல்லேகம வாராந்த சந்தைக் கட்டிடம் 2016 திசெம்பர் 15 ஆம் திகதி சபைக்கு முறையாகக் கையளிக்கப்பட்டிருந்த போதும் 2017 திசெம்பர் 31 ஆம் திகதி வரை குறித்த கட்டிடத்தை மதிப்பிட்டு விலை மனுக் கோரல் மூலம் வியாபார நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.4.3 கையேற்கப்படாத சொத்துக்கள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மஹவலி அபிவிருத்தி அதிகாரசபையிடமிருந்து வழங்கப்பட்டிருந்த பிரதேச சபை அலுவலக கட்டிடங்களை பிரதேச சபைக்கு கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சபையினால் பயன்பாட்டிற்கு எடுக்கப்படும் மயான பூமி, நூலகங்கள் மற்றும் சனசமூக மண்டபக் கட்டிடங்கள் அமைந்துள்ள 51 காணிகளை சபைக்கு கையேற்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) பிரதேச சபையினால் பயன்படுத்தப்படும் 04 வாகனங்களை சபைக்கு கையேற்கப்பட்டிருக்கவில்லை.

**3.4.4 விளைவற்ற / குறைவான பயன்பாடுடைய சொத்துக்கள்**

சபைக்குச் சொந்தமான குபோட்டா உழவு இயந்திரம் 03 வருட காலமாக விளைவற்ற வகையில் காணப்பட்டது.

**3.4.5 வருடாந்த பொருள் மெய்மையாய்வு**

மீளாய்வாண்டிற்காக பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**3.4.6 வாகனப் பயன்பாடு**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு செயலாளரின் 2016 திசெம்பர் 29 ஆந் திகதிய 30/2016 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் பிரகாரம் பிரதேச சபைக்குச் சொந்தமான 09 வாகனங்கள் தொடர்பாக எரிபொருள் எரிவுப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சபைக்குச் சொந்தமான டிபர் வண்டியொன்றின் மைலோ மீற்றர் செயற்பாட்டு நிலைமையில் காணப்படாதிருந்ததுடன் அதனை திருத்தியமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.6 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

05 வாகனங்களுக்காக வாகன அனுமதிப்பத்திரங்கள் உரிய திகதிகளில் பெற்றுக் கொள்ளப்படாமையால் ரூபா 3,2131 ஆன தண்டப்பணம் செலுத்தப்பட்டிருந்தது.

**3.7 பெறுகைகள்**

**3.7.1 பெறுகைத் திட்டம்**

2006 பெறுகை வழிகாட்டிக் கோவையின் 4.2.1 ஆம் பந்தியின் பிரகாரம் பிரதேச பெறுகை திட்டமொன்று தயாரிக்கப்படாமல் இருந்ததுடன் மீளாய்வாண்டில் ரூபா 4,750,739 ஆன கொள்வனவுகள பெறுகை திட்டமிடப்படாமல் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது.

**3.7.2 ஒப்பந்த நிர்வாகம்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன

**பிடவல சமனல விளையாட்டரங்கின் அடிப்படை வசதிகளை மேம்படுத்தல்**

உள்ளுராட்சி மன்றங்களின் அடிப்படை வசதிகளை மேம்படுத்தும் மூலதன வேலைத்திட்டம் - 2016 இன் கீழ் மாதளல சமுர்த்தி சங்கத்திற்கு ரூபா. 800,000 நிதி 2016 ஒக்தோபர் 30 ஆம் திகதி வழங்கப்பட்டு வேலைகள் பூர்த்தியாக்கப்பட்டிருந்தன. இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

i. முடிக்கப்பட்ட வேலைகள் தொடர்பான அறிக்கையின் 11 ஆம் இலக்க வேலை விடயத்திற்கமைய செரமிக் கழுவும் தொட்டிகள் இரண்டு மற்றும் அவற்றிற்கான கழிவு நீர்க் குழாய்த் வழியை அமைப்பதற்காக ரூபா. 13,544 செலுத்தப்பட்டிருந்த போதும் குறித்த வேலை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

ii. 14 ஆம் இலக்க வேலை விடயத்தின் கீழ் பொருத்தப்பட்டிருந்த கதவுகள் முறையாக பொருத்தப்படாதிருந்ததுடன் பூட்டுக்கள் தேவையான தரத்தில் இருக்கவில்லை. குறித்த வேலை விடயங்களிற்காக ரூபா 29,789 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

iii. 20 ஆம் இலக்க வேலை விடயத்தின் கீழ் பொருத்தப்பட்டிருந்த நுழைவாயில் உடைந்திருந்ததுடன் அதற்காக ரூபா. 12,000 செலவிடப்பட்டிருந்தது.

iv. 21 ஆம் இலக்க வேலை விடயத்தின் கீழ் உள்ள 06 ஆவது விடயத்தில் குறிப்பிடப்பட்டிருந்த மரங்கள் இனங்காண்பதற்கு இலகுவான முறையில் நடப்படாதிருந்ததுடன் அதற்காக ரூபா 24,000 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டில் வருமானங்கள் மற்றும் செலவினங்களுக்கு இடையே நிதிஏற்பாடு மாற்றப்பட்டதன் பின்னரும் பாதிடப்பட்ட மற்றும் உள்ளவாறான செலவினங்களுக்கு இடையே கருத்திற்கொள்ளக்கூடியளவு விலகல் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவ கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக பயன்படுத்தப்பட்டிருக்க வில்லை. இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) பாதிடப்பட்ட வருமானங்கள் மற்றும் உள்ளவாறான வருமானங்களுக்கு இடையே 10 சதவீதம் முதல் 400 சதவீதம் வரையான விலகல் காணப்பட்டன.

(ஆ) 25 செலவின விடயங்களுக்காக மேற்கொள்ளப்பட்ட ரூபா 508,050 நிதி ஏற்பாடுகளில் எவ்வித செலவினமும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(இ) 69 செலவின விடயங்களின் தேறிய நிதியேற்பாட்டிற்கும் உள்ளபடியான செலவினத்திற்குமிடையே 10% முதல் 100% வரையான வீச்சில் விலகல் காணப்பட்டன.

### 4.2 உள்ளகக் கணக்காய்வு

1988 இன் (நிதி மற்றும் நிர்வாகம்) விதிக் கோவை 5(7) விதியின் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வு பிரிவொன்று தாபிக்கப்பட்டிருந்த போதிலும் உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகள் எதுவும் வழங்கப்பட்டிருக்கவில்லை.

### 4.3 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

2014 ஆகஸ்ட் 01 ஆந் திகதிய சிபீசீ/சீஎம்எஸ்/01/6 ஆம் இலக்க மத்திய மாகாண பிரதான செயலாளரின் சுற்றறிக்கையின் பிரகாரம் வருடாந்தம் 04 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட வேண்டிய போதிலும் 2017 ஆம் ஆண்டில் 01 கூட்டம் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தது.

4.4 **தீர்வு செய்யப்படாத அவதானிப்புக்களும் பதில் அளிக்கப்படாத கணக்காய்வு விசாரணைகளும்**

வழங்கப்பட்ட 20 கணக்காய்வு விசாணைகளுக்கு பதில் அளிக்கப்பட்டிருக்கவில்லை.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் காலத்திற்குக் காலம் சபையின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| | முறைமைகள் | | குறைபாடுகள் |
|---|---|---|---|
| (அ) | கணக்கீடு | | வருடாந்த கணக்குகளுக்கு தேவையான பதிவேடுகள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | சொத்துக்கள்/ ஆதனம் | i. | சபைக்குச் சொந்தமான காணி மற்றும் கட்டிடங்கள், மோட்டார் வாகனங்கள், இயந்திராதிகள், அலுவலக உபகரணங்கள் மற்றும் தளபாடங்கள் ஏடுகளுக்கு உட்படுத்தாமை. |
| | | ii.. | காணி கட்டிடங்கள் தொடர்பாக உரித்தின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | இருப்புகள் | i. | களஞ்சியத்திற்கு பொருட்கள், கிடைப்பனவு, களஞ்சியத்திலிருந்து பொருட்களை விநிோகித்தல் மற்றும் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாத பொருட்களை மீள களஞ்சியத்திற்கு பொறுப்பேற்றல் தொடர்பாக முறையான இருப்புக் கட்டுப்பாடொன்று செயற்படுத்தப்படாமை |
| | | ii. | இருப்பு பதிவேடுகள் முறையாக நாளது வரையாக்கப்படாமை |
| (ஈ) | கடன்பட்டோர்/ கடன்கொடுத்தோர் | i. | கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் மீதிகள் இனங்காணக்கூடிய வகையில் பட்டோலைகள் தயாரிக்கப்படாமை. |
| | | ii. | நானாவித கடன்பட்டோர், நானாவித கடன்கொடுத்தோர் மற்றும் வருமான கடன்பட்டோர் கணக்கினுள் முன்காண்டு வரப்படும் மீதிகளுக்காக காலப்பகுப்பாய்வொன்று தயாரிக்கப்படாமை |
| (உ) | ஊழியர் முகாமைத்துவம் | | மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் பதவியணியின் 22 வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமை |